**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**

**OS No. 249/2022**

**15.07.2025 வா.சா.2 கண்ணன் த.பெ. வேடியப்பன்**

**சத்திய பிரமாணத்தின் பேரில் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் விவசாயம் செய்துவருகிறேன். எனக்கு 2 மகன்கள் மற்றும் 2 மகள்கள். வாதி ராணி என் மனைவி. செல்வதுரை என் மனைவியின் உடன் பிறந்த அண்ணன். பிரதிவாதி பூவேந்தன் செல்வதுரையின் மகன். செல்வதுரைக்கு 4 மகன்கள். அவர்கள் கிருஷ்ணமூர்த்தி, பூவேந்தன், கோதண்டன் மற்றும் மேகநாதன் . செல்வதுரைக்கு உமா என்ற மகளும் உள்ளார். செல்வதுரையின் சொந்தஊர் மஞ்சம்பூண்டி. அவர் மேஸ்திரி வேலை செய்து வந்து திருவண்ணாமலையில் வீடு கட்டி குடியிருந்து வருகிறார். எனக்கு 1974 ல் திருமணம் ஆனது. செல்வதுரை சொத்து வாங்கிய விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. அந்த கிரைய ஆவணத்தில் நான் சாட்சி கையொப்பமும் அல்லது இன்னார் என்று நிரூபிக்க சாட்சியாகவோ கையொப்பம் செய்யவில்லை. செல்வதுரைக்கும் எனக்கும் மாமன் - மச்சான் என்ற வகையில் கொடுக்கல் வாங்கல் உண்டு என்றால் அப்படி எதுவும் கிடையாது. எனக்கும் செல்வதுரைக்கும் கொடுக்கல் வாங்கல் இல்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் மகன்களுக்கும் செல்வதுரைக்கும் கொடுக்கல் வாங்கல் இருந்தது இல்லை. செல்வதுரை கிரையம் பெற்ற இடத்தில் வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்று சொல்வது சரிதான். அந்த வீட்டை 3 பகுதியாக கட்டி குடியிருந்தார்கள் என்றால் சரிதான். அந்த வீட்டின் நீள ,அகலம் எனக்கு தெரியும். ஒவ்வொரு போர்ஷனும் நீளம் ,அகலம் தெரியுமா என்றால் தெரியாது. மொத்தமாக தெரியும். தற்போது ஞாபகத்திற்கு வரவில்லை என்று சாட்சி கூறுகிறார். செல்வதுரை கட்டிய வீட்டின் நீளம், அகலம் ஆகியவை எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. செல்வதுரை சொத்து எத்தனை சர்வே எண்ணுக்கு உட்பட்டது என்று கேட்டால் எனக்கு ஞாபகம் இல்லை. கதவு எண் மட்டுமே தெரியும். செல்வதுரை 2 சர்வே எண்ணில் சொத்துக்களை வாங்கி 3 போர்ஷனாக வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றால் ஞாபகம் இல்லை. செல்வதுரை ஒரு போர்ஷனை விற்று கொடுக்க எனக்கு ஒரு அதிகாரம் கொடுத்தார். நான் தாக்கல் செய்த வா.சா.ஆ.2 பொது அதிகார பத்திரத்தில் அப்படிதான் உள்ளதா என்றால் அந்த கேள்விக்கு சாட்சி நெடுநேரம் யோசித்துவிட்டு பதில் எதுவும் சொல்லவில்லை. செல்வதுரை என்னிடம் ரூ. 4 லட்சம் கடனாக வாங்கிருந்தார் என்று சொன்னால்

சரியல்ல. அந்த கடன் கொடுப்பிற்காக வா.சாஆ.2 அதிகார ஆவணத்தை நான் அவரை நிர்பந்தம் செய்து எழுதி வாங்கிக்கொண்டேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 அதிகார ஆவணத்தில் எந்த சர்வே எண்ணில் , எவ்வளவு அளவு உள்ள சொத்து சம்மந்தப்பட்டது என்றால் 3 ல் ஒரு பாகம் என்று மட்டும் சொல்லி எழுதிக்கொடுத்தார். வா.சாஆ.2 அதிகார ஆவணத்தில் எனக்கு மேற்படி சொத்தை வெளிநபர்களுக்கு விலைபேசவோ அல்லது வேறுவகையில் பாராதினம் செய்ய அதிகாரம் வழங்கியதாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பொது அதிகார பத்திரத்தில் சாட்சி கையெழுத்து யார் செய்தார்கள் என்று ஞாபகம் இல்லை. உண்மையிலேயே அது பொது அதிகார பத்திரமாக இருந்திருந்தால் அதில் யார் சாட்சிகள் என்று எனக்கு தெரிந்திருக்கும் என்று சொன்னால் சரியல்ல. அந்த பத்திரம் 16.05.2012 அன்று ஏற்பட்டது. அதே தேதியில் என் மகன் மணிகண்டன் பெயரில் ஒரு கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் சரிதான். 2012 ல் அந்த சொத்தின் சந்தை விலை என்ன என்று எனக்கு தெரியாது. அந்த சொத்தின் மதிப்பு பிப்ரவரி 2014 ல் தெரியவந்தது. 16.05.2012 அன்று என் மகன் மணிகண்டனுடன் ஏற்படுத்திக்கொண்ட கிரைய ஒப்பந்தத்தில் ரூ 2 லட்சத்திற்கு பேசப்பட்டு ரூ. 50,000/- முன் பணம் கொடுத்ததாக உள்ளது என்று சொன்னால் சரிதான். ஆனால் அந்த ரூ. 50,000/- ஐ நான் பெறவில்லை. அந்த ஒப்பந்தம் பிறகு ரத்து செய்யப்பட்டது. பொது அதிகாரம் கொடுக்கப்பட்ட அன்றே என் மகன் பெயரில் கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொள்ள அவசியம் இல்லை என்றும், செல்வதுரையின் சொத்தை அபகரிக்கும் எண்ணத்துடன் கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டோம் என்றால் சரியல்ல. 2012 ல் பொது அதிகாரத்தில் கண்ட சொத்தின் மதிப்பு ரூ. 1 கோடியே 50 இலட்சம் என்று சொன்னால் சரியல்ல.

வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை - ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**

Additional District Judge,

Tiruvannamalai.